# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2190 - 2020 අගෝස්තු මස 21 වැනි සිකුරාදා - 2020.08.21**

*2190 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 142 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 143 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2020, செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, ஓகத்து மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்காணி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


141 - B 082042 - 353 (2020/08)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

## ஹூம்பகஸ்கமுவ எனும் இடத்தில் உள்ள காணிப் பிரச்சினை தொடர்பாக 2014.09.05 ஆந் திகதி மற்றும் 2015.04.17 ஆந் திகதிகளில் பிரசுரமான முறையே 1879 மற்றும் 1911 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்களை இரத்துச் செய்யும் அறிவித்தல்

*தம்புள்ள பிரதேச செயலாளர் பிரிவில், நிகவட்டவன கிராம அலுவலர் பிரிவில் ஹூம்பகஸ்கமுவ எனும் இடத்தில் உள்ள காணிகள் தொடர்பாக, காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 19 இன் உப பிரிவு (4) இன் கீழ் வழங்கப்பட்ட அளிப்பு இலக்கம் 210 இரத்துச் செய்யப்பட்டமை தொடர்பாக விடுக்கப்பட்ட 2014.09.05 ஆந் திகதி மற்றும் 2015.04.17 ஆந் திகதிகளில் பிரசுரமான முறையே 1879 மற்றும் 1911 ஆம் இலக்க இரண்டு வர்த்தமானி அறிவித்தல்களும் இரத்துச் செய்யப்படுகின்றன என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.*

*ஆர். எம். சீ. ஹேரத்,*
*காணி ஆணையாளர் நாயகம்.*

*08-455*

---

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள பிரதான பத்திரத்தினை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*தென் மாகாண சபையின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் திஸ்ஸமஹாராம பிரதேச செயலாளர் பிரிவின், தொடம்பஹல லொகு யத்தெஹிகே காலிங்க பிரியவங்ச ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1985 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆந் திகதி வழங்கப்பட்ட அம்/பிர/1732 ஆம் இலக்க பிரதான பத்திரத்தின் உரிமையாளரான உடுவில என்னும் முகவரியில் வசிக்கும் பியபேம விஜேசிரிவர்தனவிற்கு வழங்கப்பட்டு அம்பாந்தோட்டை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் இலக்கம் அம்/208/296/85 இன்கீழ் 1985.05.21 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டு கீழ் கொடுக்கப்பட்டுள்ள துணை ஆவணத்தில் காணப்படும் நிலத்திற்கு பிரதிநிதியாக ஆகுவதற்கு சட்டபூர்வ உரிமை உடைய ஒருவராக இல்லாதபட்சத்தில் அல்லது உரிமை உடையவர் ஒருவர் இருந்தாலும் அவர் பிரதிநிதியாக மாறுவதற்கு விரும்பாத சந்தர்ப்பத்தில் பிரதிநிதித்துவத்திற்கு ஒருவர் இல்லை என்று பதிவு செய்யப்பட்டு இருந்தால் மேலே குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்துச் செய்வதற்கான வேலைத்திட்டங்கள் செயற்பட்டு வருகின்றன என்பதனை இங்கு தெரிவிக்கின்றோம். இது தொடர்பில் ஏதாவது எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2020.10.02 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்துமூலம் தெரிவிக்க வேண்டும்.*

**அட்டவணை**

*கோனகம லந்தவின், அம்பாந்தோட்டை நிர்வாக மாவட்டத்தின் திஸ்ஸமஹாராம பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மகம்பத்து வீரவில கிராமத்தில் உள்ள உடுவில, வீரவெல்லா கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகம் தொகுத்த WA/MA/PRA/SE ஆம் இலக்க புலத்தின் 385 ஆம் இலக்க காணித்துண்டில் 3 றூட் 10 பேர்ச் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது :*

*வடக்கு : லொட் 387 இன் இருப்பு ;*
*கிழக்கு : லொட் 387, ரிசர்வ் மற்றும் லொட் இல. 385பி, ரிசர்வ் ;*
*தெற்கு : லொட் 385டீ ரிசர்வ் மற்றும் லொட் இல. 385ஏ ரிசர்வ் ;*
*மேற்கு : லொட் 385ஏ, ரிசர்வ் மற்றும் லொட் இல. 387 ரிசர்வ்.*

*டீ. எல். கே. பிரியவங்ச,*
*பிரதேச செயலாளர்,*
*திஸ்ஸமஹாராம.*

*பிரதேச செயலகம்,*
*திஸ்ஸமஹாராம,*
*2020, மே 11.*

*07-457*

*இணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

*சப்பிரகமுவ மாகாண சபையின் கேகாலை மாவட்டத்தில், ரம்புக்கனை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் டபிள்யூ. எல். ஆர். இந்திக்க லியனகே ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் ஆளுநர் அவர்களினால் 1962.12.19 ஆந் திகதி அளிப்புச் செய்யப்பட்டுள்ள ஆர் 6896 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான லிந்தகாவ அக்கரே குடியேற்றத்தில் வசிக்கும் எதிரிசிங்ஹகே செமுவல் என்பவருக்கு கையளிக்கப்பட்டு, கேகாலை மாவட்ட காணிப்பதிவகத்தில் இலக்கம் ஆர் 6896 இன்கீழ் 1963.02.27 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்குப் பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக உரித்தாளர் ஒருவர் இன்மையினால் அல்லது உரித்தாளர் ஒருவர் இருந்தும் அவர் பின்னுரித்தாளராவதற்கு விரும்பாத காரணத்தினால் பின்னுரித்திற்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளமையினால் குறித்த அளிப்புப்பத்திரத்தை, மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இத்தால் அறிவித்தல் செய்கின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றை 2020.09.11 ஆந் திகதிக்கு முன் எனக்கு எழுத்துமூலம் தெரிவித்தல் வேண்டும்.*

***அட்டவணை***

*கேகாலை நிர்வாக மாவட்டத்தின் ரம்புக்கனை பிரதேச செயலாளர் பிரிவின் கல்பொட மற்றும் கிணிகொட கோரலவில், அலுகொல்ல கிராம அலுவலர் பிரிவில் ஹேவாதிவல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், கேகாலை நில அளவை அத்தியட்சகரின் பொறுப்பில் இருக்கின்ற நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு களப்பத்திரம் 1 இல் இறுதிக் கிராம வரைபட இலக்கம் 127 இல் காணித்துண்டு இலக்கம் 679 கொண்ட 00 ஏக்கர் 03 றூட் 31 பேர்ச் விஸ்தீரணம் உள்ளதுமான கீழே காட்டப்பட்டுள்ளவாறு எல்லைகளுக்குட்பட்டதுமான அரச காணி லிந்தகாவ அக்கரே :*

*வடக்கு : இ. கி. வ. 127 இல் காணித்துண்டு இலக்கம் 762 மற்றும் ரீபீ 334669 ;*
*கிழக்கு : இ. கி. வ. 127 இல் காணித்துண்டு இலக்கம் 680 ;*
*தெற்கு : இ. கி. வ. 127 இல் காணித்துண்டு இலக்கம் 683, குடியேற்ற வீதி ;*
*மேற்கு : இ. கி. வ. 127 இல் காணித்துண்டு இலக்கம் 678.*

*டபிள்யூ. எல். ஆர். இந்திக்க லியனகே,*
*பிரதேச செயலாளர்,*
*ரம்புக்கனை.*

*பிரதேச செயலகம்,*
*ரம்புக்கனை,*
*2020, மாச்சு 06.*

*08-456*

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

*காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/58325.*
*மாகாணக் காணி ஆணையாளரின்*
*இல. : ஏஎல்சீ/கேஜீ/டீ/24/தீப 36.*

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*கேகாலை மாவட்டம், கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பி.சோ.வெல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கர்மான்தபுர பூமி எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு கேகாலை நில அளவையாளர் அத்தியட்சகரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் 610031 ஆம் இலக்க கடஸ்ரல் வரைபடத்தில் வலய இலக்கம் 6 இல் காட்டப்பட்டுள்ள 0.0049 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட காணி இலக்கம் 151 மற்றும் ஹெக்டயார் 0.1569 விஸ்தீரணத்தைக் கொண்ட காணித்துண்டு இலக்கம் 152 ஆகிய அரச காணித்துண்டுகளை பொலித்தீன் பைகளை தயாரித்து அச்சிடும் ஒரு தொழிற்சாலையை பைகேஜிங் பிறைவெட் லிமிட்டெட் குத்தகைக்குத் தருமாறு கேட்டு விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.*

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

காணித்துண்டு இலக்கம் 151

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 150 ;
கிழக்கு : பாதை ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 41 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 41.

காணித்துண்டு இலக்கம் 152

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 41 ;
கிழக்கு : பாதை ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 189 மற்றும் 153 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 154.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பத்தைந்து (35) வருடங்கள் (2012.07.31 தொடக்கம் 2047.07.30 வரையிலும்) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை**.- குத்தகை முறியின் முதல் 5 வருடங்கள் 2012.07.31 தொடக்கம் 2017.07.30 வரையிலும் குத்தகை அறவிடப்பட மாட்டாது. பிரதான மதீப்பிட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2012 ஆம் வருடத்திற்கான சந்தைப் பெறுமதியின் 4% வருடாந்த குத்தகையாகத் திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த 5 வருடங்களின் இறுதியில் கொடுக்கப்பட்ட தொகையிலும் பார்க்க 50% வீதத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

தவணைப்பணம்.- கர்மாந்தபுர காணி ஆகையால் அறவிடப்படமாட்டாது.

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி குத்தகையின் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(உ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஏ) 2012.07.31 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகையின் நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் மட்டும் அனுமதிக்கப்படும் ;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமான தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

ஏ. எச். எம். பி. டி. அபேசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகெத மெதுர”.
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, ஓகத்து 21.

08-458

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.